

### தலைநகர் கோலாலம்பூரில்

# 64 இடங்களில் ரமலான் சந்தைகள்

## பொதுமக்கள் திரள்வார்கள்

கோலாலம்பூர், மார்ச் 10- தலைநகர் கோலாலம்பூர் சுற்றுப்பகுதிகளில் ஏறத்தாழ 64 இடங்களில் ரமலான் சந்தை அமைக்கப்படுகிறது. மார்ச் 12ஆம் தேதி தொடங்கி இந்த ரமலான் சந்தை திறக்கப்படும்போது பொதுமக்கள் பெருந்திரளாக அங்கு கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வங்சா மாஜு, லெம்பா பந்தாய், கம்போங் பாரு, கம்போங் பண்டான், டத்தோக் கிராமாட் போன்ற பகுதிகளில் அதிகமான மக்கள் ரமலான் சந்தைகளில் திரள உள்ளனர்.

2 பிரிவுகளாக இம்முறை ரமலான் சந்தை அமைக்கப்படுகிறது. ஒரு பிரிவு கோலாலம்பூர் மாநகர் மன்ற நிர்வாகத்தின் கீழ் இயங்கும். இன்னொரு பிரிவு ஏற்பாட்டுத் தரப்பின் பராமரிப்பில் செயல்படும் என்று மாநகர் மன்றம் வெளியிட்ட அறிக்கை தெரிவித்தது.

கோலாலம்பூர் மாநகர் மன்ற நிர்வாகத்தின் கீழ் லோரோங் துவாங்கு அப்துல் ரஹ்மான், தாமான் தாசேக் பெர்மைசூரி வாகனம் நிறுத்தும் இடம் ஆகிய பகுதிகளில் ரமலான் சந்தை இயங்கும். அதேசமயம் மாநகர் மன்றம் அங்கீகரித்த 62 இடங்களில் ஏற்பாட்டுத் தரப்பினர் ரமலான் சந்தைகளை நிர்வகிப்பார்கள் என்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

தாமான் தாசேக் பெர்மைசூரியில் ரமலான் மாதம் முழுவதும் வியாபாரம் செய்வதற்கு 160 இடங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

மார்ச் 12 தொடங்கி ஏப்ரல் 9ஆம் தேதி வரை இந்த ரமலான் சந்தைகள் செயல்படும். தினசரி பகல் 3 மணி தொடங்கி இரவு 8 மணி வரை அங்கு வியாபாரம் நடைபெறும்.

அதேசமயம் உலர் பொருட்களுக்கான விற்பனை காலை 10 மணி தொடங்கிய நள்ளிரவு 12 மணி வரை நீடிக்கும்.